# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## விளம்பி, மார்கழி 19, திருவள்ளுவர் ஆண்டு 2049

## 2019 ஜனவரி 3, வியாழக்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00* மணியளவில் *பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்*
*பெருமை உடைத்துஇவ் வுலகு."*

*நேற்று இருந்த ஒருவர், இன்று இல்லாமல் இறந்து போனார் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமையை உடையது இந்த உலகம்.*

*[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 1. இரங்கற்குறிப்புகள்

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. எஸ்.டி. உக்கம்சந்த் அவர்கள் 11-7-2018 அன்றும், செல்வி சி. கனகதாரா அவர்கள் 5-8-2018 அன்றும், திரு. எஸ். சண்முகநாதன் அவர்கள் 18-8-2018 அன்றும், திரு. சை. நாகூர்மீரான் அவர்கள் 27-8-2018 அன்றும், திரு. பே.வே.சீ. வெங்கடேசன் அவர்கள் 25-9-2018 அன்றும், திரு. பெ. மலைச்சாமி அவர்கள் 12-10-2018 அன்றும், திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் 13-10-2018 அன்றும், திரு. ரா. சந்திரசேகரன் அவர்கள் 22-10-2018 அன்றும், திரு. கோ. வீரய்யன் அவர்கள் 18-11-2018 அன்றும்,*

[பேரவைத் தலைவர்] [2019 ஜனவரி 3

திரு. எல். சந்தானம் அவர்கள் 24-11-2018 அன்றும், திரு. வி.ஜி. தனபால் அவர்கள் 12-12-2018 அன்றும் மற்றும் திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்கள் 15-12-2018 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ்.டி. உக்கம்சந்த் அவர்கள் 1980 முதல் 1984 வரை மற்றும் 1989-1991 ஆம் ஆண்டுகளில் மதுராந்தகம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

செல்வி சி. கனகதாரா அவர்கள் 2001-2006 ஆம் ஆண்டுகளில் பேரணாம்பட்டு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

திரு. எஸ். சண்முகநாதன் அவர்கள் 1991-1996 ஆம் ஆண்டுகளில் ஆலங்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, திறம்பட பணியாற்றினார்கள்.

திரு. சை. நாகூர்மீரான் அவர்கள் 1991-1996 ஆம் ஆண்டுகளில் கடையநல்லூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றினார்கள். மேலும், 1992 முதல் 1996 வரை அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. பே.வே.சீ. வெங்கடேசன் அவர்கள் 1996-2001 ஆம் ஆண்டுகளில் காவேரிப்பட்டினம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. பெ. மலைச்சாமி அவர்கள் 1967-1971 மற்றும் 1971-1976 ஆகிய ஆண்டுகளில் மேலூர் வடக்கு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, செவ்வனே பணியாற்றினார்கள்.

திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் 1985-1986 ஆம் ஆண்டுகளில் பெரம்பூர் (செ.வ.) தொகுதியிலிருந்தும், 1989-1991, 1991-1996, 1996-2001, 2001-2006 மற்றும் 2006-2011 ஆகிய ஆண்டுகளில் எழும்பூர் (செ.வ.) தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நன்கு பணியாற்றினார்கள்.

*2019 ஜனவரி 3]* [பேரவைத் தலைவர்]

*மேலும், 1996 முதல் 2001 வரை தமிழக சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவராகவும், 2006 முதல் 2011 வரை செய்தித் துறை அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார்கள்.*

*திரு. ரா. சந்திரசேகரன் அவர்கள் 1977-1980 ஆம் ஆண்டுகளில் கம்பம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.*

*திரு. கோ. வீரய்யன் அவர்கள் 1985-1988 மற்றும் 1989-1991 ஆகிய ஆண்டுகளில் நாகப்பட்டினம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றினார்கள்.*

*திரு. எல். சந்தானம் அவர்கள் 1996-2001 ஆம் ஆண்டுகளில் சோழவந்தான் தொகுதியிலிருந்தும் மற்றும் 2001-2006 ஆம் ஆண்டுகளில் உசிலம்பட்டி தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.*

*முற்பகல் 10-05*

*திரு. வி.ஜி. தனபால் அவர்கள் 1996-2001 ஆம் ஆண்டுகளில் குடியாத்தம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, திறம்பட பணியாற்றினார்கள்.*

*திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்கள் 2001-2006 ஆம் ஆண்டுகளில் செய்யாறு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, செவ்வனே பணியாற்றினார்கள்.*

*இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும்வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*